# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## EP.No.37/2025

dated : 07.04.2026

P.W. 1

Name சுரேந்திரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

புளியங்குடி கிளையில் உள்ள அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட கடனுக்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் அதனை குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். அசல் அதிகார ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 17.06.2014 ம் தேதி எனக்கு வழங்கப்பட்ட அதிகார ஆவணமாகும். மும்பையில் உள்ள நிர்வாக இயக்குநர் அதிகாரம் வழங்கியுள்ளார். அந்த அதிகார ஆவணம் பதிவு செய்யப்பட்டதாகும். அதிகார ஆவணம் ஆண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட வேண்டுமென்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அதிகார ஆவணம் புதுப்பிக்கப்பட்டதல்ல என்றால் சரிதான். நான் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டதாக கூறப்படும் அதிகார ஆவணம் நடைமுறையில் இல்லை என்றும் அதனால்தான் அசல் ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் அதனால்தான் அதனை ஆவணமாக குறியீடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட அதிகாரம்

இவ்வழக்கு தாக்கல் செய்வதற்காக தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்ட அதிகாரம் அல்ல பொது அதிகாரம் ஆகும். எனக்கு அதிகாரம் வழங்கப்படாத நிலையில் நான் நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்யவே உரிமையில்லை என்றால் சரியல்ல. எனவே இந்நிறைவேறுதல் மனு சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அடைமானம் ஏற்படுத்தியதாக கூறப்படும் 2310/18 ஆவண எண்ணுக்குரிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4054/2018 ஆவண எண்ணுக்குரிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு அதிக விவசாய நிலங்கள் உள்ளது என்பதற்கும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருமானம் ஈட்டிவருகிறார் என்பதற்கும் புதிய பேருந்து நிலையத்திற்கு எதிரே கடை நடத்தி வருமானம் ஈட்டி வருகிறார் என்பதற்கும் இடையார்தவனையில் விவசாய நிலங்கள் வைத்து வருமானம் ஈட்டி வருகிறார் என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவண எண்.2310/2018 க்குரிய சொத்தை அடைமானம் மற்றும் ஜப்தி செய்து வைத்துள்ளோம் என்றால் சரிதான். ஆவண எண்.4054/2018 க்குரிய சொத்தையும் அதிலுள்ள ஜங்கம சொத்துக்களையும் ஜப்தி செய்து வைத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த விவரங்களை இம்மனுவிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஜப்தி செய்யப்பட்ட விவரத்தை நீதிமன்றத்தில் தெரிவித்தால் எதிர்மனுதாரருக்கு கடனை திரும்ப செலுத்தக்கூடிய தகுதியில்லை என்று தெரிந்துவிடும் என்பதால் அதனை

தெரிவிக்காமல் அதனை மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மை விவரங்களை மறைத்து நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கடனை திரும்ப செலுத்தமுடியாததால் தொழில் நஷ்டம் ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. TN76 AK1258 மகிந்திரா வாகனத்திற்கான கடன் ஆகும். மேற்படி வாகனத்தை 2020ம் ஆண்டில் நாங்கள் பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு 2 சொத்துக்கள் மட்டுமே உள்ளது என்றும்அதையும் நாங்கள் ஜப்தி செய்து முடக்கி வைத்துள்ளோம் என்றும் அதனால் எதிர்மனுதாரர் வருமானம் ஏதுமின்றி இருந்து வருகிறார் என்றும் எனவே இக்கடனை எதிர்மனுதாரர் திரும்ப செலுத்தக்கூடிய நிலையில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் வாகன கடனிற்காகதான் 2310/2018 ஆவண அடைமானம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. வாகன கடனிற்காகதான் அடைமானம் ஏற்படுத்தினார் என்றும் அதனையும் ஜப்தி செய்துள்ளோம் என்றும் வருமானம் ஈட்டும் வாகனத்தையும் எங்களிடம் ஒப்படைத்துள்ளதால் எதிர்மனுதாரர் வருமானமின்றி இருந்து வருகிறார் என்றும் எதிர்மனுதாரரை கஷ்ட நஷ்டம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி இரண்டு சொத்துக்களையும் எவ்வளவு கடனிற்காக ஜப்தி செய்து வைத்துள்ளோம் என்று ஆவணங்களை பார்க்காமல் கூற இயலாது. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள அடைமான ஆவணம் தாக்கல்

செய்யப்பட்டால் எவ்வளவு கடனிற்காக அடைமானம் பெறப்பட்டது என்று தெளிவாகும் என்றால் சரிதான். சுமாராக இரண்டு கோடி ரூபாய் கடன் திரும்ப செலுத்த வேண்டுமென்று நாங்கள் பல நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம் என்றால் குறிப்பிட்டு என்னால் கூற இயலாது. கடன் விவரம் எனக்கு தெரியும் என்றும் அதனை ஒப்புக்கொண்டால் மேற்படி சந்ததிகள் என் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் அதனை மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.04.07 17:57:34 +0530